பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 01 சனிக்கிழமை 13.02.2021 கதிர் 331

## இலங்கையில் 10 மாவட்டங்களில் ஆயிரத்துக்கும் மேல் தொற்றாளர்

### யாழில் 312 பேர் பாதிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாவது அலையில் ஆயிரம் தொற்றாளர்களுக்கு அதிக தொற்றாளர்கள் பதிவான மாவட்டங்களின் எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு (27,243) மற்றும்

2

# கோட்டாபயவின் இராணுவ ஆட்சியே தமிழர் பேரணிக்கு முக்கிய காரணம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு



இலங்கையில் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது. இந்த ஆட்சியால் சீற்றமடைந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இன்று ஐ.நாவிடம் நீதி வேண்டி ஜனநாயக வழியில் போராட்டங்களையும், பேரணிகளையும் முன்னெடுக்கின்றனர்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தமிழ்பேசும் மக்கள் மீதான அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும், சர்வதேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி

2

### பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் தடை உத்தரவை மீறியதாக

# சாணக்கியன், ஜனா, கலையரசன், அரியம் உட்பட 7 பேருக்கு கல்முனை நீதிமன்றம் அழைப்பாணை



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா), த. கலையரசன் உள்ளிட்ட எழுவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.**

2

## பழ.நெடுமாறனுக்கு கொரோனாத் தொற்று


தமிழர் தேசிய முன்னணியின் தலைவரும் ஈழத் தமிழர் தீவிர ஆதரவாளருமான பழ.நெடுமாறன் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு லேசான காய்ச்சல், சளி இருந்ததால் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வைத்தியசாலையில்

2

## தமிழ் மக்கள் நீதி கோரி வீதியில் இறங்க ராஜபக்ஷக்களே காரணம்

### சந்திரிகா அம்மையார் குற்றச்சாட்டு



வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், சர்வதேசத்திடம் நீதி கோரி வீதியில் இறங்கிப் போராட ராஜபக்ஷக்களின் கொடூர ஆட்சியே காரணமாகும்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

2

## கிழக்கில் களமிறங்க தயாராகும் ஸ்ரீரங்கா!



எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் ஊடகவியலாளர்களை இணைத்துக் களம் இறங்கவுள்ளதாக பிரஜைகள்

2

## ஈஸ்டர் தாக்குதல் ஜனாதிபதி விசாரணை அறிக்கை பொதுபலசேனாவிடமும் கையளிக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதியின் செயலாளருக்குக் கடிதம்



உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் ஒரு பிரதியை பொதுபலசேனா அமைப்புக்கும்

2

## பிரதமர் மஹிந்தவின் அறிவிப்பு அரசின் நிலைப்பாடு இல்லையா?

### சஜித் அணி சாடல்



கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்யும் விவகாரத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயும்

2

## பொருளாதாரத் தடை வராத விதத்தில் ஜெனிவாச் சவாலை எதிர்கொள்வோம்

### வெளிவிவகார அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு



இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படாத விதத்தில் செயற்படக்கூடிய ஆற்றல் தற்போதைய அரசுக்கு இருக்கின்றது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

'ஜெனிவா விவகாரத்தால் இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் வரக்கூடும்.

2






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கிழக்கில் களமிறங்க ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரு மான ஜே.ஸ்ரீரங்கா தெரிவித்துள்ளார்.

அம்பாறை ஊடக அமையத்தில் அண்மையில்நடைபெற்றகலந்துரையா டல் ஒன்றின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ரங்காவின் தேர்தல் அணிக்கு கிழக் கில் உள்ள ஊடகவியலாளர்களின் ஒத்து ழைப்பு கோரப்பட்ட போதிலும் அதற்கு ஊடகவியலாளர்கள் மறுப்புத் தெரிவித்து விட்டனர் எனவும் தகவல் வெளியாகி யுள்ளது.

ஜனவரி 19ஆம் திகதி குறித்த சந்திப்பு இடம்பெற்றிருந்தாலும் தற்போதுதான் தகவல்கள் ஊடகங்களுக்குக் கசியவிடப் பட்டுள்ளன.

## பிரதமர் மஹிந்தவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்கொன்று முரணான கருத் துக்களை வெளியிட்டுள்ளனர். இவ்விட யத்தில் நாடாளுமன்றத்தில் பிரதமர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது என்றால், அவரின் கருத்து அரசின் நிலைப்பாடல்ல என்பதைப் பகி ரங்கமாக அறிவிக்க வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தினார்.

சடலங்களை அடக்கம் செய்யும் விவ காரத்தில் அரசுக்குள்ளேயே இரு வேறு நிலைப்பாடுகள் முன்வைக்கப்படுகின் றமை தொடர்பில் கருத்து வெளியிடுகை யிலேயே திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின்சடலங்களைஅடக்கம் செய்யும் விவகாரத்தில் அரசியல்வாதி கள் கருத்துக்கூற முடியாது. மாறாக இந்த விடயத்தில் தேர்ச்சி பெற்ற விசேட நிபு ணர்களின் அபிப்பிராயத்தை அரசு வெளியிட வேண்டும். எனினும், அத னைச் செய்வதில் அரசு ஏன் தொடர்ந்தும் தயக்கம் காட்டுகின்றது என்ற சந்தேகம் பொதுமக்களிடத்தில் உள்ளது.

இந்தநிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங் களை அடக்கம் செய்வது தொடர்பில் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த பிரத மர், அதற்கு அனுமதி வழங்கப்படும் என் றார். எனினும், இந்த விடயத்தில் விசேட நிபுணர் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாகவே இறுதித் தீர்மானம் மேற் கொள்ளப்படும் என்று இராஜாங்க அமைச் சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவ்வாறெனின், சடலங்களை அடக் கம் செய்வதற்கு அனுமதியளிப்பதாகப் பிரதமரால் வெளியிடப்பட்ட கருத்து பொறுப்பற்ற தன்மையைப் புலப்படுத்து கின்றதா? இந்த விடயத்தில் பிரதமரின் வாக்குறுதியை நடைமுறைப்படுத்த முடியாதெனின், அவரால்வெளியிடப்பட்ட கருத்து அரசின் நிலைப்பாடல்ல என்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் - என்றார்.

## பொருளாதாரத் தடை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் பொருளாதாரம் பாதிக்கப்படக் கூடும் என்ற அச்சம் வர்த்தகர்கள் மத்தி யில் இருக்கின்றது. இது தொடர்பில் தங் கள் கருத்து என்ன என்று?' எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

இலங்கையின் பொருளாதாரத்தில் கைவைப்பதற்கு சில மேற்குலக நாடுகள் முயற்சிக்கின்றன. அவ்வாறான நாடுக ளுக்கும், அங்குள்ள அமைப்புகளுக்கும் யதார்த்த நிலைமை குறித்து எடுத்துரைக் கப்பட்டும். அத்துடன், அவர்கள் அறிந்தி ராத பல தகவல்களை முன்வைப்பதற்கு இலங்கையால் முடியுமாக இருக்கின்றது.

இலங்கையில் முற்போக்கு சக்தி யொன்று நாட்டை ஆளும் பட்சத்தில் தமது நாட்டுக்கு எதிரானவற்றை தோற் கடிப்பதற்கே நடவடிக்கைகளை எடுத்துள் ளன. எனவேதான், எமக்கு ஏதோவொரு விதத்தில் அழுத்தங்களை கொடுப்பதற் கான முயற்சிகள் தொடர்கின்றன.

பொருளாதாரத்தடை, பொருளாதார வீழ்ச்சி ஆகியன குறித்து அறிவிப்புகள் வெளி வந்தாலும் அவை நடைமுறைக் குவராத வகையில் பார்த்துக்கொள்ளக் கூடிய - செயற்படக்கூடிய ஆற்றல் இலங்கை அரசுக்கு இருக்கின்றது.- என் றார்.

## ஈஸ்டர் தாக்குதல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க வேண்டும் அல்லது பொது பலசேனா அமைப்பு குறித்து பிரதான நிலை ஊடகத்தில் வெளியாகியுள்ள செய்தி குறித்து உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல் தொடர்பான ஜனாதி பதி விசாரணை ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை முன்னெக்க வேண் டும்.

-இவ்வாறு வலியுறுத்தி பொதுபல சேனா அமைப்பின் ஊடகச் செயலாளர், ஜனாதிபதியின் செயலாளருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் கடந்த 2019.04.21ஆம் திகதி நடத்தப் பட்ட தொடர் தற்கொலைக் குண்டுத்தாக் குதல் குறித்து விசாரணைகளை மேற் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் பொதுபலசேனா அமைப்பு மற்றும் அதன் பொதுச்செயலாளர் ஞானசார தேர ருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் உள்ள டக்கப்பட்டுள்ளன என்று பிரதான ஊடக சேவை தலைப்புச் செய்தி வெளியிட் டுள்ளது.

ஜனாதிபதிவிசாரணைஆணைக்குழு வின் அறிக்கை ஆணைக்குழுவின் தலைவரினால் ஜனாதிபதிக்கு மாத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நாடாளுமன்றத்துக்கோ, ஏனைய தரப் பினருக்கோ இதுவரையில் வழங்கப்பட வில்லை. எமது அமைப்பு குறித்து அறிக் கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்படும் விடயங்கள் ஊடகங்கள் வாயிலாக வெளியாகியுள்ளமை பொது பலசேனா அமைப்புக்கு இழைக்கும் அநீதியாகவே கருத முடியும்.

பொதுபலசேனா அமைப்பு தொடர்பில் பிரதான ஊடகத்தில் வெளியாகியுள்ள செய்தியை ஆணைக்குழுவின் உறுதிப் படுத்தப்பட்ட தகவலாகவே குறித்த ஊடகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தச் செய்தி மக்கள் மத்தியில் மாறுப்பட்ட கருத்தைத் தோற்றுவித்துள் ளது. இந்த விடயம் குறித்து எமது அமைப்பின் சார்பில் சாட்சியங்களைப் பெறுவது அவசியமாகும் - என்றுள்ளது.

2019.04.21அன்று - உயிர்த்த ஞாயிறு தினத்தில் 8 இடங்களில் நடத்தப்பட்ட தொடர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த ஜனாதி பதி விசாரணை ஆணைக்குழுவினர் கடந்த மாதம் 31ஆம் திகதி விசாரணை அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்கள் நீதி கோரி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசின் தமிழ்பேசும் மக்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டித் தும், சர்வதேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூ கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்பட்ட பேரணியின் போது தமிழ் மக்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால், அவர்கள் அவ்வாறு கோரிக்கைகளை முன்வைப்ப தற்கான நிலையை ஏற்படுத்தியமைக்கு ராஜபக்ஷ அரசே பொறுப்புக்கூற வேண் டும்.

முன்னாள் ஜனாதிபதியும் தற்போ தைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ, தமது கடந்த ஆட்சியில் ஐ.நாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் வழங்கியிருந்த வாக்குறுதிகளைநிறைவேற்றியிருந்தால் தமிழர்கள் இன்று சர்வதேசத்திடம் நீதி கோரி வீதியில் இறங்க வேண்டிய நிலை வந்திருக்கமாட்டாது.

இந்த ஆட்சியிலும் அவரின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ, தனது ஜனாதிபதி பதவியைத் துஷ்பிரயோகப்படுத்தி வரு கின்றார்.

சிவில் நிர்வாகச் செயற்பாடுகளின் உயர் பதவிகளில் இராணுவத்தினரை நியமித்துள்ளதுடன் மட்டுமன்றி வடக்கு, கிழக்கில் தமிழர்களைப் பழிவாங்கும் வகையிலும் இந்த அரசு செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான மோசமான செயற் பாடுகளே தமிழர்களைக் கொதித்தெழ வைத்துள்ளது - என்றார்.

## பழ.நெடுமாறனுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டார்.

தொடர்ந்து அவரிடம் மாதிரிகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோ னாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

தற்போது ராஜீவ்காந்தி அரச வைத்தி யசாலையில் பழ.நெடுமாறன் சேர்க்கப் பட்டுள்ளார். அவர் நலமுடன் இருக்கின் றார் என்று மருத்துவர்கள் தகவல் தெரி வித்துள்ளனர்.

இந்தநிலையில் பழ.நெடுமாறன் உடல் நிலை குறித்து அரசியல் கட்சித் தலைவர்கள் கேட்டறிந்து வருகின்றனர்.

இது தொடர்பாக நாம் தமிழர் கட்சி யின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் டுவிட்டரில் பதிவு ஒன்றை வெளி யிட்டுள்ளார்.

அதில், தமிழ்ப் பேரினத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான பெருமதிப் புக்குரிய ஐயா பழ.நெடுமாறன் கொரோனா நோய்த் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவரும் செய்தி அறிந்தேன். ஐயா முழுமையான உடல் நலம் பெற்று மீண் டும் இனமானப் பணிகளைத் தொடர எனது உளப்பூர்வமான விருப்பத்தைத் தெரிவிக்கின்றேன் - என்று சீமான் பதி விட்டுள்ளார்.

## கோட்டாபயவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரைக்கும் வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூ கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பில் கருத்துரைக் கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் இடம்பெற்ற பேரணியைப் பல வழிகளில் தடுத்துநிறுத்த அரசு முற் பட்டது. எனினும், வடக்கு, கிழக்கில் பெரும் எண்ணிக்கையில் தமிழ் மக்கள் திரண்டு பேரணியை நடத்தியுள்ளனர்.

பேரணியில் கலந்துகொண்டவர்கள், அரசுக்கும் இராணுவத்துக்கும் எதிரா கவே கோஷங்களை எழுப்பினார்கள். சிங்கள மக்களுக்கு எதிராக அவர்கள் எந் தக் கோஷங்களையும் எழுப்பவில்லை.

நாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தலைமையில் இராணுவ ஆட் சியே தற்போது நடைபெறுகின்றது. அதனால் சீற்றமடைந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இன்று ஐ.நாவிடம் நீதி வேண்டி ஜனநாயக வழியில் போராட வேண்டிய நிலைக்கு வந்துள்ளனர்.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் எமது அரசுக்கு எதிராக தமிழ் மக்கள் இவ் வாறான போராட்டங்களை முன்னெடுக் கவில்லை. ஆனால், இந்த ஆட்சி தமிழ் மக்களை நீதி கேட்டுப் போராடத் தள்ளி யுள்ளது.

இந்தநிலையில், பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் பங்கேற்றவர்களுக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுப்போம் என்று அரச தரப்பி னர் வெளியிட்டுள்ள கருத்துக்கு எமது கண்டனங்களைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

தமிழ் மக்களைப் போராடத் தள்ளிய அரச தரப்புக்கு எதிராகவே முதலில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின்கூட்டத்தொடரில்இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்கள் கொண்டு வரப் பட்டால் அதற்குக் கோட்டாபய அரசே முழுப்பொறுப்பு - என்றார்.

## சாணக்கியன், ஜனா, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 3ஆம் திகதி பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான நீதிக்கான பேரணியில் கலந்துகொள்வதைத் தடுக் கக் கோரி, கல்முனை பொலிஸ் நிலையத் தால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட் பட 29 பேருக்கு எதிராக கல்முனை நீதி வான் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது.

குறித்த பேரணியில் நீதிமன்றத் தடை உத்தரவை மீறிக் கலந்துகொண்டனர் எனக் குற்றஞ்சாட்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக கல்முனை நீதிவான் நீதிமன்றத் தில் கல்முனைப் பொலிஸார் கடந்த 5ஆம் திகதி வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு மீதான விசாரணை கல்முனை நீதிவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் இன்று இடம்பெற்றது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பி னர்களான இரா.சாணக்கியன், கோவிந் தன் கருணாகரம், த.கலையரசன், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேந்திரன், சீ.யோகேஸ்வரன், மாணவர் மீட்புப் பேரவையின் தலைவர் செ. கணேசானந்தன் மற்றும் இலங் கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் துணைச் செயலாளர் அ.நிதான்சன் ஆகியோருக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி நீதிமன்றத் தில் ஆஜராகுமாறு கல்முனை நீதிவான் அழைப்பாணை பிறப்பித்துள்ளார்.

## இலங்கையில் 10 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம்பஹா (14,865) ஆகிய மாவட் டங்களே அதிக அச்சுறுத்தல் மிக்க மாவட் டங்களாகக் காணப்படுகின்றது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, களுத்துறை மாவட் டம் (5,652) மூன்றாவது இடத்திலும், கண்டி மாவட்டம் (4,218) நான்காவது இடத்திலும், குருநாகல் மாவட்டம் (2,288) ஐந்தாவது இடத்திலும், காலி மாவட்டம் (1,977) ஆறாவது இடத்திலும், இரத்தினபுரி மாவட்டம் (1,697) ஏழாவது இடத்திலும், அம்பாறை மாவட்டம் (1,226) எட்டாவது இடத்திலும், மாத் தறை மாவட்டம் (1,102) ஒன்பதாவது இடத் திலும், கேகாலை மாவட்டம் (1,040) பத்தாவது இடத்திலும் உள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டம் 312 தொற் றாளர்களுடன் 19ஆவது இடத்தில் உள் ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜனாதிபதிதான் கட்சித் தலைவரா?

ஆளும் கட்சிக் கூட்டணியின் 'பயர் பிராண்ட்' அரசியல்வாதி அமைச்சர் விமல் வீரன்ஸ கிளப்பி விட்ட ஒரு குழப்பம் அரசியல் வட்டாரங்களில் பேச்சுக்குரியதாக மாறி விட்டிருக்கின்றது.

ஆளும் பொதுஜன பெரமுனவின் தலைவர் பதவியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து பிடுங்கி, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடம் கையளிக்க வேண்டும் என்பதே விமல் வீரவன்ஸவின் கருத்து.

அதை ஒட்டி வாதப் பிரதிவாதங்கள் கிளர்ந்துள்ளன. அதில் ஒன்று – ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் அக்கட்சியின் தலைவராகவும் அவரே இருக்க வேண்டும். அதுவே முறை. முன்னாள் ஜனாதிபதிகள் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாஸா, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன எல்லோரும் அப்படித்தான் இருந்தார்கள். அதே முறைமையின் கீழ் கோட்டாபய ராஜபக்ஷவும் ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவின் தலைவராவதுதான் முறையானதாகும். – என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது.

பழைய அரசியல் சரிதம் தெரியாதவர்களின் கருத்து நிலைப்பாடு இது. உண்மை அதுவல்ல.

இதுவரை காலமும் ஜனாதிபதி பதவியை வகித்தவர்களின் கட்சிகள் இரண்டும் – சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் – நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை 1978இல் கொண்டு வரப்பட்டதற்கு முன்னர் தோன்றியவை. அவற்றின் யாப்பு எதிலும் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக வருபவர் எவருமே கட்டாயம் கட்சியின் தலைவராக இருக்க வேண்டும் என்று விதிமுறை எதுவும் இருக்கவில்லை.

எனினும், கட்சியின் தலைவர் பதவியில் இருப்பவரே பெரும்பாலும் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்பதால் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், பிரேமதாஸாவும், அவர்களைத் தொடர்ந்து டி.பி.விஜேதுங்கவும் கட்சியின் தலைவராகவும் ஜனாதிபதியாகவும் இருந்தனர்.

இரண்டு தடவைகள் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, 1989 இல் தமது இரண்டாவது பதவிக் காலம் முடிந்தபோது முழு நேர அரசியலில் இருந்து விலகிக் கொண்டார். ஜனாதிபதிப் பதவியையும் கட்சித் தலைவர் பதவியையும் அவர் ஒரே சமயத்தில் துறந்தமையால், இரண்டும் ஒரே சமயத்தில் பிரேமதாஸா கைகளுக்கு மாறியது. பிரேமதாஸ கொல்லப்பட இரண்டையும் டி.பி.விஜேதுங்க ஏற்றார்.

ஆனால் சந்திரிகா குமாரதுங்க தமது இரண்டாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியைத் துறந்தபோது கட்சித் தலைவர் பதவியைத் துறக்க மறுத்து விட்டார். அவருடன் முரண்பட்ட நிலையில் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதனால் கட்சிக்குள் விடயங்களைக் கொண்டு நடத்துவது நெருக்கடியாக இருந்தது. அதனால் தமது ஜனாதிபதி பதவியை வைத்துக் கொண்டு மஹிந்தர் அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொண்டார். கட்சிப் பிரமுகர்கள் பலரும் அமைச்சர் பதவிகளுக்காக மஹிந்தரின் காலடியில் வீழ்ந்து கிடந்தனர். அதனைப் பயன்படுத்தி சு.காவின் யாப்பு விதிகளை மாற்றுவித்தார் மஹிந்தர். சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியானால் அவரே சு.கவின் தலைவர் என்ற ஏற்பாட்டை அவர் புகுத்தினார். ஆனால் சில வருடங்களின் பின்னர் அதுவே அவருக்கு ஆப்பாக மாறியது.

தனக்கிருந்த அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்த மஹிந்தர் அதன் மூலம் மூன்றாவது தடவையும் ஜனாதிபதி தேர்தலில் குதித்தார்.

அதுவரை சு.கவின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு, சு.கவின் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பொது எதிரணியின் வேட்பாளராக அன்னச் சின்னத்தில் களமிறங்கினார். ஆனால் அச்சமயம் சு.கவின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து அவர் விலகவில்லை. அவரை உறுப்பினர் பதவியில் இருந்து விலக்குவதற்கு அந்தத் தேர்தல் சமயத்தில் மஹிந்தர் தரப்பும் முனைப்புக் காட்டவில்லை. அந்தத் தேர்தலில் தாங்களே வெற்றியீட்டுவார்கள் என்ற அதீத நம்பிக்கையில் இருந்த மஹிந்தர் தரப்புச் செய்த பெரும் தவறு அதுதான். எதிர்க் கட்சிப் பொது வேட்பாளராகக் களத்தில் இறங்கிய மைத்திரிபால சிறிசேனவை அதற்காகச் சுதந்திரக் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து நீக்கும் நடவடிக்கையில் மஹிந்தர் தரப்பு சிரத்தை காட்டாமல் விட்டு விட்டது. அதனை நன்கு பயன்படுத்திக் கொண்டார் அத் தேர்தலில் வென்று ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன.

*"நான் இப்போதும் சு.க. உறுப்பினர். நான் இப்போது ஜனாதிபதி. சு.க. உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியானால் அவரே கட்சித் தலைவர் என சு.கவின் புதிய யாப்பு விதி கூறுகின்றது. அதன்படி நானே சு.கவின் தலைவர்"* – என்று கூறி அந்த யாப்பு விதிகளைப் பயன்படுத்தி சு.க. தலைமைப் பதவியை மஹிந்தரிடம் இருந்து பிடுங்கினார் மைத்திரிபால.

சு.க. தலைமைப் பதவியை இழந்தமையால்தான் மஹிந்தர் தரப்பு புதிதாக பொதுஜன பெரமுனவைத் தோற்றுவிக்க வேண்டி வந்தது.

சு.கவில் பட்ட பாடம் காரணமாக, கட்சி உறுப்பினர் ஜனாதிபதியானால் அவரே கட்சியின் தலைவர் என்ற விதிமுறையை பொதுஜன பெரமுனவில் சேர்க்காமல் புறந்தள்ளி விட்டார் மஹிந்தர்.

இப்போது அந்தக் கட்சித் தலைமைப் பதவியை அவரிடம் இருந்து பறித்து, அவரது இளைய சகோதரரும் ஜனாதிபதியுமான கோட்டாபயவிடம் கொடுக்க மீளவும் முயற்சி நடக்கின்றது. அவ்வளவுதான்...!

# பௌத்த உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை பிரதமர் மஹிந்தவிடம் கையளிப்பு





அகில இலங்கை பௌத்த காங்கிரஸால் பௌத்த உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் கையளிக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டு பௌர்ணமி தினத்தில் மிஹிந்தலை புனித பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு நாடு முழுவதும் ஈராண்டுகளுக்கு அதிக காலம் ஆதாரங்களை திரட்டி இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைவர் ஜகத் சுமதிபாலவால் ஆணைக்குழு அறிக்கை பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த சந்தர்ப்பத்தில் பௌத்த உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பாலித பெர்னாண்டோ (ஓய்வுபெற்ற நீதிபதி) உள்ளிட்ட ஆணைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதனுடன், நவீன பௌத்த மத வரலாறு மற்றும் பௌத்த மாநாடுகளின் நூற்றாண்டு மலரும் பிரதமருக்கு வழங்கப்பட்டது.

இலங்கையின் பாரம்பரியம் அனைவருக்கும் சொந்தமானது என சுட்டிக்காட் டிய புதிய சிங்கள ராவய தேசிய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர், இந்நாட்டின் தொல்பொருள் மதிப்புகளைத் தமிழ் மொழிக் கல்வியில் சேர்ப்பது தொடர்பாக ஆராயுமாறு பிரதமரிடம் இதன்போது கேட்டுக் கொண்டார்.

அந்தச் சந்தர்ப்பத்திலேயே அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தேசிய பாரம்பரியம் தொடர்பான அத்தியாயத்தை தமிழ் மொழிக் கல்வியில் இணைப்பது பற்றி ஆராய்ந்து அறியத்தருமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவிற்கு பணிப்புரை விடுத்தார்.

குறித்த நிகழ்வின்போது பௌத்த உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான சந்திர நிமல் வாகிஸ்ட, பேராசிரியர் நிமல் சில்வா, விசேட வைத்திய நிபுணர் நரேந்திர பிந்து, பேராசிரியர் மாலனி மெதகம உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை சட்டமா அதிபரும் கோருகின்றார்!

கொழும்பு, ஜன.13

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரதி ஒன்றை தமக்கு வழங்குமாறு ஜனாதிபதி செயலாளரிடம் சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது தொடர்பில் ஆராய்வதற்காகவே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரி அரச சட்டவாதி நிஷாரா ஜயரட்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவின் கொரோனாத் தடுப்பூசியை மக்களுக்கு வழங்குவது குறித்து ஆய்வு

ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசியை மக்களுக்கு வழங்குவது தொடர்பில் பகுப்பாய்வு செய்யப்படுவதாக ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு கோடியே 80 லட்சம் அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள, ஔடதங்கள் கூட்டுத்தாபனம் மூலம் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளைப் பயன்படுத்தி இந்திய அரசாங்கத்திடம் இருந்து அவற்றை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அமைச்சின் செயலாளர் வைத்தியர் அமல் ஹர்ஷடிசில்வா தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதமளவில் மற்றுமொரு தொகை தடுப்பூசி கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கையுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்புட்னிக் - 5 தடுப்பூசி தென் கொரியா உள்ளிட்ட 22 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டு பாவனையில் உள்ளது என்றும் இந்த நிலையில் குறித்த தடுப்பூசியையும் விரைவில் பகுப்பாய்வு செய்து அதற்கான பதிவை பெற்றுத்தருமாறு ஔடதங்கள் கூட்டுத்தாபனத்திடம் கோரப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசியை மக்களுக்கு வழங்குவது தொடர்பாகப் பகுப்பாய்வு செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாவுக்குப் பின்னர் இதுவரை 1,682 சுற்றுலாப் பயணிகள் வருகை!

கொழும்பு, ஜன. 13

கொரோனா தொற்றின் தாக்கத்தையடுத்து, இந்த வருடம் ஜனவரி 21ஆம் திகதிக்கு பின்னரான இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் 1,682 பேர் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை குறிப்பிடுகின்றது.

சீனா, உக்ரைன் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகளே இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளதுடன், ஏனைய நாடுகளில் இருந்து சிறியளவிலான எண்ணிக்கையானோரே இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

எனினும் தற்போது ஏனைய நாடுளில் இருந்து இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்துள்ளதுடன், இனிவரும் காலங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை கணிசமானளவில் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை குறிப்பிடுகின்றது.

இதேவேளை, இலங்கை – இந்தியாவுக்கான விமானப் போக்குவரத்து சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பேச்சு நடத்தப்பட்டு வருவதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# விசாகப்பட்டினம் அருகே சோகம் சுற்றுலா பஸ் கவிழ்ந்து 8 பேர் பலி

ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் அனந்தகிரி கிராமத்திற்கு அருகே ஒரு சுற்றுலா பஸ் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதில் 8 பேர் பரிதாபமாக பலியானார்கள். மேலும் பலர் காயமடைந்தனர்.

ஹைதராபாத்தின் தனியார் டிராவல்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான சுற்றுலாப் பஸ் அனந்தகிரி கிராமத்திற்கு அருகே சாலையில் திரும்பும்போது எதிர்பாராத விதமாக பஸ் செங்குத்தான பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது.

இந்த பஸ்சில் 30 பயணிகள் இருந்தனர். இதில் 8 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகி உள்ளனர். காயமடைந்த சில பயணிகளின் நிலைமை ஆபத்தானதாக உள்ளதாக கூறப்படுகிறது.

காயமடைந்தவர்கள் அம்புலன்ஸில் விசாகப்பட்டினம் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். மீட்பு நடவடிக்கைகள் நடந்து வருவதாக



# மாசி மாத பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறப்பு



சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல, மகர விளக்கு சீசன் மற்றும் திருவிழா நாள்கள் தவிர ஒவ்வொரு தமிழ் மாதத்தின் முதல் 5 நாள்கள் கோவில் நடை திறக்கப்பட்டு பூஜை, வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, மாசி மாத பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை நேற்று மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. தந்திரி கண்டரரு ராஜீவரு முன்னிலையில், மேல் சாந்தி ஜெயராஜ் போற்றி நடையை திறந்து வைத்து, சாமிக்கு தீபாராதனை காட்டினார். மற்ற பூஜைகள் நடைபெறவில்லை. இரவு 9 மணிக்கு அரிவராசனம் பாடி நடை அடைக்கப்பட்டது.

இன்று (சனிக்கிழமை) முதல், சபரிமலை ஐயப்பன் கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்படும். தொடர்ந்து நிர்மால்ய தரிசனம், கணபதி ஹோமம்,நெய்அபிஷேகம்,உஷபூஜை,உச்சபூஜைக்கு பின் மதியம் 1 மணிக்கு நடை அடைக்கப்படும்.

மீண்டும் மாலை 4 மணிக்கு நடை திறக்கப்படும். 6.30 மணிக்கு சிறப்பு தீபாராதனை நடைபெறும். அதைத்தொடர்ந்து படி பூஜை நடைபெறும். இரவு 8.50 மணிக்கு நடை அடைக்கப்படும், இந்த பூஜை 17ஆம் திகதி வரை 5 நாள்கள் நடைபெறும்.

கேரளாவில் அதிகரித்து வரும் கொரோனாவை கருத்தில் கொண்டு, ஒன்லைன் முன்பதிவு அடிப்படையில் தினசரி 5 ஆயிரம் பக்தர்கள் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் ஒன்லைனில் முன்பதிவு செய்த ஐயப்ப பக்தர்கள், தரிசனத்திற்கு வரும் போது, 48 மணி நேர இடைவெளியில் எடுக்கப்பட்ட கொரோனா ஆர்.டி.பி.சி.ஆர். அல்லது ஆர்.டி. லேப் மருத்துவ பரிசோதனை செய்ததற்கான நெகட்டிவ் சான்றிதழ் கண்டிப்பாக கொண்டு வர வேண்டும்.

மாத பூஜை காலங்களில் தினசரி 15 ஆயிரம் பக்தர்களை சாமி தரிசனத்திற்கு அனுமதிக்க வேண்டும் என்று தேவஸ்தானம் கோரிக்கை விடுத்தது. கொரோனா தொற்றை கருத்தில் கொண்டும், சுகாதார துறையின் பரிந்துரையை ஏற்றும் தேவஸ்தானத்தின் கோரிக்கையினை அரசு நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

# போக்சோ வழக்குகளில் சர்ச்சைத் தீர்ப்பு வழங்கிய கூடுதல் நீதிபதி கனேடிவாலாவுக்கு மேலும் ஓராண்டுக்கு பதவிக்காலம் நீடிப்பு

போக்சோ வழக்குகளில் பெரும் சர்ச்சைக்குரிய தீர்ப்பு வழங்கிய மும்பை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதி புஷ்பா கனேடிவாலாவுக்கு மத்திய அரசு மேலும் ஓராண்டு பணி நீடிப்பு வழங்கியுள்ளது.

மும்பை உயர்நீதிமன்றத்தின் நாக்பூர் கிளையில் கூடுதல் நீதிபதியாக பணியாற்றி வருபவர் புஷ்பா கனேடிவாலா. ஆடைக்கு மேல் தீண்டுவது பாலுறவு அத்துமீறல் அல்ல என்று கூறி, சிறுமியிடம் அத்துமீறிய வனை போக்சோ வழக்கில் இருந்து இவர் விடுவித்தது பெரும் சர்ச்சையானது.

மேலும் 2 போக்சோ வழக்குகளிலும் இந்த நீதிபதி வழங்கிய தீர்ப்புகள், பொதுமக்கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தும் வகையில் சர்ச்சையாகின. இதையடுத்து அவரை, நிரந்தர நீதிபதியாக்கும் பரிந்துரையை உச்ச நீதி மன்ற கொலீஜியம் திரும்பப் பெற்றது. இந்நிலையில், மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பாணையில், புஷ்பா மேலும் ஓராண்டுக்கு கூடுதல் நீதிபதியாகவே



பணிநீட்டிப்புச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா. பொதுச்செயலர் பதவிக்கு இந்திய வம்சாவளி பெண் போட்டி!



ஐ.நா. பொதுச்செயலர் பதவிக்குப் போட்டியிடப் போவதாக இந்திய வம்சாவளியைச்சேர்ந்தபெண்ணான அரோரா அகாங்சா அறிவித்துள்ளார். ஐ.நா. பொதுச் செயலர் அன்றானியோ குட்ரசின் பதவிக் காலம் இந்த ஆண்டு டிசெம்பருடன் முடிவடைகிறது.

மேலும் ஓர் ஐந்தாண்டுகள் பதவியில் இருக்க அவர் விருப்பம் தெரிவித்துள்ளார். இந்நிலையில் ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தில் தணிக்கை ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றி வரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 34 வயதுப் பெண் அரோரா அகாங்சா ஐ.நா. பொதுச்செயலர் பதவிக்குத் தான் போட்டியிடப் போகிறார் என அறிவித்துள்ளார்.

அரோரா பார் செக்ரட்டரி ஜெனரல் என்னும் ஹேஷ் டேக்குடன் டுவிட்டரில் அதற்கான பிரசாரத்தையும் ஆரம்பித்து இரண்டரை நிமிட வீடியோவைப் பதிவிட்டுள்ளார்.

# அரசின் திட்டங்கள் ஏழைகளுக்கானவை நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன்

இந்திய மத்திய அரசின் பல திட்டங்கள் ஏழைகளுக்கானவை என நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கூறியுள்ளார்.

மக்களவையில் பட்ஜெட் குறித்த விவாதங்களுக்கு பதில் அளித்த அவர், அரசுக்கு நெருக்கமான பெரு முதலாளிகளுக்காக மட்டுமே திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன என்ற எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டை மறுத்தார்.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தான்



பெரு முதலாளிகளுக்கு சாதகமான முடிவுகள் எடுக்கப்பட்டதாக நிர்மலா குற்றஞ்சாட்டினார்.

கொரோனா பரவலால் ஏற்பட்ட சவால்கள், நாட்டின் நீண்ட கால வளர்ச்சிக்கான சீர்திருத்த திட்டங்களை முன்னெடுப்பதில் மத்திய அரசுக்கு எந்த விதத்திலும் தடையாக இருக்கவில்லை என அவர் கூறினார்.

சுகாதாரம் குறித்து மத்திய பட்ஜெட் முழுமையான அணுகுமுறையை கொண்டுள்ளது என அவர் கூறினார்.

# தமிழகத்தில் புயல் பாதிப்பு 286.91 கோடி நிதி ஒதுக்கீடு



தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு கூடுதல் வெள்ள நிவாரண நிதியாக இந்திய அரசு இந்திய ரூபாய் 3,113 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழகம், ஆந்திரா, புதுச்சேரி, மத்திய பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட 5 மாநிலங்களுக்கு மொத்தம் ரூ.3,113.05 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

புரெவி புயல் மற்றும் நிவர் புயல் பாதிப்புக்களுக்காக தமிழகத்திற்கு மத்திய அரசு ரூ.286.91 கோடி நிதி ஒதுக்கி உள்ளது.

தமிழகத்துக்கு நிவர் புயல் பாதிப்புக்காக ரூ.63.14 கோடியும், புரெவி புயல் பாதிப்புக்காக ரூ.223.77 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிவர் புயலால் பாதிக்கப்பட்ட புதுச்சேரிக்கு ரூ.9.91 கோடி நிதியையும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

அதிகபட்சமாக பீகார் மாநிலத்துக்கு வெள்ள நிவாரண நிதியாக ரூ.1,225.27 கோடியை மத்திய அரசு ஒதுக்கியது.

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடந்த உயர்மட்ட குழுக் கூட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




# உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பு 10 கோடி 87 லட்சத்தை தாண்டியது



சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. வைரஸ் தொற்றுப் பரவி ஏறத்தாழ 10 மாதங்கள் கடந்து விட்டாலும் இதன் வீரியம் குறைந்தபாடில்லை.

கொரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேசில், ரஷ்யா, பிரிட்டன் ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 10.87 கோடியைக் கடந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 8.07 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 23.92 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 2.54 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 99 ஆயிரத்து 500க்கு மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

## சீனாவின் இந்த நடவடிக்கையை ஏற்க முடியாது; பி.பி.ஸி. தடை தொடர்பில் பிரிட்டன் கண்டனம்!

கொரோனா வைரஸ் தொற்றை சீனா கையாண்ட விதம், உய்கர் இனவாத சிறுபான்மையினரை நடத்தும் விதம் குறித்து தவறான செய்திகளை பி.பி.ஸி. உலகச்செய்தி ஒளிபரப்பியதாக சீனா குற்றம்சாட்டிவந்தது. இந்நிலையில், ஒளிபரப்பு நெறிமுறைகளை மீறியதாக பி.பி.ஸி. உலக செய்தி ஒளிபரப்புக்கு சீனா தடை விதித்துள்ளது.

பி.பி.ஸி. உலக செய்தி சேவைக்கு தடை விதித் துள்ள சீன அரசின் நடவடிக்கைக்கு, பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் டோமினிக் ராப் கண்டனம் தெரிவித்துள்ளார். ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சீனாவின் நடவடிக்கை ஏற்க முடியாதது, என அவர் தெரிவித்துள்ளார்.

உலகெங்கிலும் உள்ள ஊடகங்கள் மற்றும் இணைய சுதந்திரத்திற்கு சீனா மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இந்த சமீபத்திய நடவடிக்கையானது, உலகின் பார்வையில் சீனாவின் நற்பெயரை பாதிக்கும்



என்றும் அவர் கூறி உள்ளார்.

பிரிட்டனில் சமீபத்தில் சீன அரசு ஒளிபரப்பு நிறுவனத்தின் (சி.ஜி.டி.என்.) ஒளிபரப்பு உரிமம் ரத்து செய்யப்பட்டது. பிரிட்டன் சட்டத்தை மீறியதாக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் சீனாவின் தொலைத்தொடர்பு நிறுவனமான ஹுவாய் நிறுவனத்தின் 5ஜி நெட்வொர்க் பணிகளுக்கும் தடைவிதித்தமை குறிப்பிடத்தக்கது.

## மாடலாக மாறிய இகுவானா உயிரினம்



மாடல் அழகிகள் கடற்கரையில் அமர்ந்துகொண்டு போஸ் கொடுப்பது போன்று தாய்லாந்தில் மஞ்சள் நிற இகுவானா ஒன்று ஒய்யாரமாக படுத்திருக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

சோன்பூரி மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் இந்த இகுவானாவை வளர்த்துவரும் நிலையில், ஒரு கையை தலையில் வைத்துக் கொண்டு இகுவானா ஓய்வெடுத்திருக்கிறது. இதனை பார்ப்பதற்கு கவர்ச்சியான பிகினி மாடல் போன்று இருப்பதாக கூறி வீடியோ எடுத்த இகுவானாவின் உரிமையாளர் சமூகவலைதளங்களில் பதிவிட்டுள்ளார்.




## மியன்மார் ஆட்சிக் கவிழ்ப்பை ஆதரிக்கும் பதிவுகளை நீக்க முகநூல் நிறுவனம் முடிவு

மியன்மாரில் ஆட்சி மாற்றத்தை ஆதரிக்கும் பதிவுகளை தடுக்க முகப்புத்தக நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ராணுவம் ஆட்சியை ஆதரிக்கும் அல்லது ஆட்சிக் கவிழ்ப்பை ஆதரிக்கும் இடுகைகளை கவனிக்க அந்நிறுவனம் முடிவு செய்துள்ளது.

கடந்த வாரம் நடந்த போராட்டத்தின் போது, காவல்துறையால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இத்தகைய முடிவை முகநூல் நிறுவனம் எடுத்துள்ளது.

இந்த நிலையில் மியன்மாரில் ஜனநாயகத்தை நிலைநாட்டவும், கைது செய்யப்பட்ட தலைவர்களை விடுவிக்கவும் ஐ.நா. சபை கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த விடயத்தில் அமெரிக்காவை பின்பற்றவும் ஐ.நா . மன்றம் திட்டமிட்டுள்ளது.

## கிளப் உலகக் கோப்பை விருது வழங்கும் விழாவில் பெண் நடுவர்களுடன் கைகுலுக்க மறுத்த இளவரசர்





கிளப் உலகக் கோப்பை கால்பந்து போட்டி நடுவர்களுக்கு விருது வழங்கும் விழாவில் கட்டார் இளவரசர் பெண் நடுவர்களுடன் கைகுலுக்க மறுத்து விட்டார்.

கட்டாரில் டைக்ரஸ் யு.ஏ.என்.எல். அணிக்கும் பேயர்ன் மூனிச் அணிக்கும் நடந்த போட்டியில் சிறப்பாகப் பணியாற்றிய நடுவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

அப்போது ஆண் நடுவர்களுக்கு விருது வழங்கிய கட்டார் இளவரசர் ஷேக் ஜோஆன் பின் ஹமாத் அல் தானி, பெண் நடுவர்களுக்கு கைகுலுக்க மறுத்து விட்டார்.

இஸ்லாமியச் சட்டப்படி அன்னியப் பெண்களைத் தொடக் கூடாது என்பதால் அவர் அப்படி நடந்து கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ரஷ்யா மீது புதிய பொருளாதார தடைகளை விதித்தால் ஐரோப்பிய கூட்டமைப்பு உறவுகளை துண்டிக்க தயார்

ரஷ்யாவில் எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னியை கைது செய்து சிறைத் தண்டனை விதித்த விவகாரத்தில் அந்நாட்டு அரசுக்கும் ஐரோப்பிய கூட்டமைப்புக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது.

அலெக்சி நவால்னியை சிறை வைத்திருப்பது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை எனக் கூறும் ஐரோப்பிய கூட்டமைப்பு அவரை உடனடியாக விடுவிக்கக் கோரி ரஷ்ய அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது.

இதற்கிடையே, ரஷ்யாவில் அலெக்சி



நவால்னிக்கு ஆதரவான போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக ஜேர்மனி, போலந்து மற்றும் சுவீடன் ஆகிய ஐரோப்பிய நாடுகளின் 3 தூதர்களை ரஷ்யா அதிரடியாக வெளியேற்றியது.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, மேற்கூறிய 3 ஐரோப்பிய நாடுகளும் தங்களது நாடுகளிலிருந்து ரஷ்ய தூதர்களை வெளியேற்றியது. மேலும், இந்த விவகாரத்தில் ரஷ்யா மீது புதிய பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என ஐரோப்பிய கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

இந்நிலையில், பொருளாதார ரீதியாக வலிமிகுந்த புதிய பொருளாதார தடைகளை விதித்தால் ஐரோப்பிய கூட்டமைப்புடனான உறவுகளை துண்டிக்கத் தயாராக உள்ளோம் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, ரஷ்ய வெளியுறவு மந்திரி செர்ஜி லாவ்ரோவ் கூறுகையில், ஐரோப்பிய கூட்டமைப்பின் பொருளாதாரத் தடைகள் மிக முக்கியமான பகுதிகள் உட்பட நமது பொருளாதாரத்துக்கு அபாயங்களை உருவாக்கும். மேலும் இந்த தடைகளால் உறவுகளில் முறிவு ஏற்படக்கூடும். உலக விவகாரங்களிலிருந்து எங்களை தனிமைப்படுத்த நாங்கள் விரும்பவில்லை. ஆனால் நாங்கள் அதற்கு தயாராக இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

# ஆளும்கட்சி முரண்பாட்டுக்கு தீர்வு அவசியம்; நாம் அரசிலிருந்து என்றும் விலக மாட்டோம்!

## திஸ்ஸ விதாரண திட்டவட்டம்

அரசாங்கத்தில் இருந்து ஒருபோதும் விலகமாட்டோம். பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பது அவசியமாகும். அதற்கான நடவடிக்கைகளையே தற்போது முன்னெடுக்கிறோம்.

ஆளும்தரப்பின் உறுப்பினர்கள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். முரண்பட்டுக் கொண்டால் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற விசேட பேச்சு தொடர்பாக வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி அமைத்துள்ள பிரதான கட்சிகளுக்கு எதிராக வெறுக்கத்தக்க பேச்சுக்களை குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது.அமைச்சர் விமல் வீரவன்ஸ தொடர்பில் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்ட கருத்து கூட்டணிக்குள் மாறுப்பட்ட கருத்துக்களை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டணிக்குள் நிலவும் கருத்து முரண்பாடுகளைக் கொண்டு நாங்கள் அரசாங்கத்தை விட்டு விலகுவதாகக் குறிப்பிடப்படுகிறது. பாரிய போராட்டத்துக்கு மத்தியில் நாங்கள் உருவாக்கிய அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு எவ்வித அவசியமும் கிடையாது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட முன்னின்று செயற்பட்டவர்கள் என்ற ரீதியில் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

பொதுஜனபெரமுனதலைமையிலான கூட்டணியில் கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. .இதற்கு பேச்சின் ஊடாகத் தீர்வைக் காண வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துள்ளோம்.



கருத்து முரண்பாடுகளுக்குத் தீர்வைக் காணாவிடின் கூட்டணிக்குள் முரண்பாடுகளே தொடரும் அதற்கு இடமளிக்க முடியாது. ஆளும் தரப்பிற்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினையைக் கொண்டு எதிர் தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

நாட்டுமக்களுக்குவழங்கியவாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமாயின் ஆளும் தரப்பினர் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். இல்லாவிடின் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும். - என்றார்.

## யாழ். – கொழும்பு கடுகதியில் மேலும் சில பெட்டிகள் இணைப்பு!

யாழ்ப்பாணம் – கொழும்பு இடையே குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி சேவையில் ஈடுபடும் ரயிலில் புதிய வகுப்புகள் இணைக்கப்பட்ட சேவை கொழும்பிலிருந்து புறப்பட்டு நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இந்த சேவை தினமும் இடம்பெறும் என யாழ்ப்பாணம் ரயில் நிலைய பிரதான அதிபர் தி.பிரதீபன் தெரிவித்தார்.

கல்கிசையிலிருந்து தினமும் அதிகாலை 5.10 மணிக்கு புறப்படும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் ரயில் சேவை புறக்கோட்டையில் அதிகாலை 5.30 மணிக்கு புறப்பட்டு நண்பகல் 12.30 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1.15 மணிக்கு புறப்படும் ரயில் யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 1.37 மணிக்கு கொழும்பு புறப்படும்.

இந்த சேவையில் இதுவரை குளிரூட்டப்பட்ட வகுப்புகளே காணப்பட்டன. எனினும் நேற்று முதல் இந்த சேவையில் இரண்டாம் வகுப்பில் 2 பெட்டிகளும், மூன்றாம் வகுப்பில் ஒரு பெட்டியுமாக 3 மேலதிக பெட்டிகள் இணைக்கப்பட்டு 7 பெட்டிகளில் பயணிகள் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. குளிரூட்டப்பட்ட முதலாம் வகுப்புக்கு ஆயிரத்து 700 ரூபாவும் இரண்டாம் வகுப்புக்கு 1,000 ரூபாவும் மூன்றாம் வகுப்புக்கு 700 ரூபாவும் கட்டணமாக அறிவிப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுத் தேவைக்கு என ஒதுக்கப்பட்ட காணி தனி நபரால் அபகரிப்பு: எதிர்ப்பு போராட்டம்!






கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி சோரன் பற்று கிராமத்தில் பொதுத் தேவைக்கு ஒதுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் காணியை தனிநபர் ஆக்கிரமித்து வருவதுக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் சோரன்பற்று கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கரந்தாய் பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக் குழுவிற்குச் சொந்தமான காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இதில் பால் பண்ணை மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என பல்வேறு தேவைகளுக்கும் காணிகள் ஒதுக்கப்பட்டன எனவும் இதில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியை தனிநபர் ஒருவர் அடாத்தாக பிடித்து அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்து வருகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த கவனவீர்ப்பு போராட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) ஏ - 9 வீதியில் வீதியின் கரந்தாய் பகுதியில் நடைபெற்றது.

இதில் குறித்த காணியை பெற்று தருமாறு கோரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் கோ.றுசாங்கனிடம் இந்த கோரிக்கை அடங்கிய மகஜர் மக்களால் கையளிக்கப்பட்டுள்ளது

## பரந்தனில் விபத்து; ஒருவர் படுகாயம்!

கிளிநொச்சி ஏ -9 வீதியின் பரந்தன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏ- 9 வீதிவழியாக பரந்தன் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் கப்ரக வாகனம் ஒன்றும் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று (வெள்ளிக்கிழமை) மதியம் இடம்பெற்ற இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் .விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஞானசாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஈஸ்டர் தாக்குதல் ஆணைக்குழு கோரிக்கை

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டுகளை சுமத்துமாறு ஆணைக்குழு பரிந்துரைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு அளுத்கம பேருவளையில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு காரணமாகயிருந்தார் என்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணைக்குழு பரிந்துரைந்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத மற்றும் இன ரீதியிலான குழப்பங்களை ஏற்படுத்துவதற்குக் காரணமான நடவடிக்கைகளில் ஈடுபட உதவிய நபர்கள் மற்றும் அமைப்புகளை அடையாளம் காண்பதற்கு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையிலேயே ஞானசார தேரருக்கு எதிராக ஆணைக்குழு குற்றவியல் நடவடிக்கைகளுக்குப் பரிந்துரைத்துள்ளது.

எனினும் இது தொடர்பாகத் தனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆராச்சிகட்டுவ லங்கா சீ புட் தொழிற்சாலை பிரதமர் மஹிந்தவினால் திறந்து வைப்பு!

புத்தளம் ஆராச்சிகட்டுவ பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள லங்கா சீ புட் (கடலுணவு) தொழிற்சாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சர்வதேச சந்தையை இலக்காக கொண்டு மீன் ஏற்றுமதியில் ஈடுபடும் லங்கா சீ புட் நிறுவனம் சுமார் 600 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

சர்வதேச சந்தையை இலக்காக கொண்டு புதிய தொழிற்சாலையில் உயர் தரத்திலான மீன் பதப்படுத்தும் நடைமுறையை பிரதமர் பார்வையிட்டார்.

ஏற்றுமதி தரத்திலான லங்கா சீ புட் தயாரிப்புகளை எதிர்காலத்தில் உள்ளூர் நுகர்வோருக்காக நாடு முழுவதும் உள்ள சந்தை வலையமைப்பின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

லங்கா சீ புட் நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக நிறுவனத் தலைவர் சரத் கித்சிறி, இதன்போது பிரதமருக்கு விளக்கமளித்தார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான சனத் நிசாந்த, லொஹான் ரத்வத்தே, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிந்தக மாயாதுன்னே, அசோக பிரியந்த



மற்றும் லங்கா சீ புட் நிறுவனத்தின் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.02.2021இல் வெளியிடப்பெற்றது.